1972 ஆகஸ்டு 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டபோதே கூட நாங்கள் யோசித்தோம். கல்வித் துறையைத் தனியாக வைத்து அதிலுள்ளவர்களுக்கு ஊதிய விகிதத்தை நிர்ணயித்தால் பல்வேறு பிரச்னைகள் வராது என்று கூடச் சொன்னேன். ஆனாலும்கூட, சப் இன்ஸ்பெக்டர்கள், செக்ரடேரியட்டில் உள்ளவர்கள் போன்று 5 அல்லது 6 பேர்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இப்பொழுது அதிலேயிருந்து பிரித்தெடுப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களைத் தீர்க்கவேண்டிய நிலைமை இருப்பதால், அதுபற்றி ஆராய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சிக்கல்களைத் தீர்த்த பிறகு விரைவில் முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் சம்பந்தமாக ஏற்பட்ட சிக்கலை இரண்டு மாத காலத்தில் தீர்த்து விடுவதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அப்படித் தீர்த்து விடவும் இருக்கிறார்கள். அப்படித் தீர்க்கும் நேரத்தில், இனிமேல் இப்படிப்பட்ட போராட்டங்கள், மறியல் என்று ஒரு ஐந்து அல்லது எட்டு ஆண்டு காலத்திற்கு சொல்ல மாட்டோம் என்று அவர்களிடம் ஒரு உறுதிமொழியை அமைச்சர் அவர்கள் வாங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

Midday Meals.

* 4. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware that there are numerous poor students in High Schools and Colleges, who are not able to afford midday meals; and

(*b*) if so, whether the Government will consider extending midday meals scheme to them also ?

மதிய உணவு

திரு. ஜீ. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நண்பகலுணவுக்கு வழியில்லாமல், எண்ணற்ற ஏழை மாணவர்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படித்து வருவது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், அவர்களுக்கும் நண்பகலுணவுத் திட்டத்தை நீட்டிப்பது குறித்து அரசு கருதிப் பார்க்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஏழைப்பள்ளி மாணவர்கள் அனைவருக்குமே இத்திட்டத்தை நாம் விரிவாக்க இயலவில்லை. இப்பொழுது 18 இலட்சம் மாணுக்கருக்கு மதிய உணவு வழங்குவதற்கே, அரசுக்கு மட்டும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. இந்நிலையில் கல்லூரி மாணுக்கருக்கு இதை விரிவாக்க இயலாத நிலை ஏற்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த நண்பகல் உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரை, சில தனிப்பட்ட ஸ்தாபனங்கள் சேவை மனப்பான்மையுடன் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உதவி செய்து வருகின்றன. அவைகளுக்கு ஊக்கம் அளிக்கும் முறையில், அரசும் ஏதாவது நடவடிக்கைகளை எடுத்தால் அப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் மேலும் இந்தக் காரியங்களைச் செய்ய முன்வரும் என்ற கருத்து இருக்கிறது. அப்படி ஊக்கம் அளிக்கும் வகையில் ஏதாவது செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சில தனிப்பட்ட ஸ்தாபனங்கள் கல்லூரி மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்க முன் வந்திருக்கின்றன. சென்னையைப் பொறுத்தவரை, சில ஸ்தாபனங்கள் முன் வந்து சில பல கல்லூரி மாணவர்களுக்குக் கல்லூரி முதல்வர் மூலமாக உதவி தந்திருக்கிறார்கள். அதிலே அரசாங்கமும் ஒரு பங்கு எடுத்துக்கொள்வது என்று வந்தால், உதவி பெறுபவர்களின் எண்ணிக்கை ஓரளவு அதிகமாகத் தான் செய்யும். முதல் ஐந்து வகுப்புகளிலுள்ள மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்காவது கொடுக்க வேண்டுமென்ற முறையில் 18 லட்சம் மாணவர்களுக்கு அளித்து வருகிறது. இன்னும் உயர்நிலைப் பள்ளிக் கட்டத்திற்கே வரவில்லை. அதற்குப் பிறகு தான் கல்லூரிக் கட்டத்திற்கு வர வேண்டும். தனிப்பட்ட ஸ்தாபனங்கள் முன்வந்தால், அவைகளுக்கு எல்லா வகையிலும் ஊக்கம் தந்து, அவைகளின் அறத்தன்மையைப் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் சில மாணவர்களுக்கு மட்டும் மதிய உணவு கொடுக்கும்போது, அவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை வந்து, ஏழை பணக்காரர் என்ற பிளவு வளருகிறது. அரசாங்கம் சோஷலிஸத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருப்பதால், எல்லா மாணவர்களுக்கும் மதிய உணவு கொடுக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போதே அரசாங்கம் ஒதுக்குகிற 2 கோடி ரூபாயில் மட்டும் நடக்கவில்லை. 'கேர்' நிறுவனத்தார் ஐந்து, ஆறு கோடி ரூபாய் அளவுக்கு உதவி செய்வதால், 10 காசில் ஓட்டிக்கொண்டிருக்கிறோமே தவிர, அந்த உதவி வராவிட்டால், இது

1972 ஆகஸ்டு 9]

கூட நடக்காது. இந்த 2 கோடி ரூபாயில் நடத்தினால், எண்ணிக்கை குறைய வேண்டும். அதைக் காப்பாற்ற வேண்டுமென்றால், செலவழிக்கும் தொகையை அதிகமாக்க வேண்டும். அதனால்தான் மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்குத் தருவது என்று வைத்திருக்கிறோம். அதிலேயே இடர்ப்பாடு இருக்கும்போது, எல்லா மாணவர்களுக்கும் தருவது என்பது எளிதல்ல.

திரு. கே .எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, காலேஜ் அளவில் இல்லாமல், ஹைஸ்கூல் அளவுக்காவது இந்த மதிய உணவுத் திட்டத்தை விஸ்தரித்தால், எந்த அளவுக்குச் செலவு அதிகரிக்கும் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றித் தனியாகக் கணக்கிட்டுத்தான் சொல்ல முடியும். அரிசன மாணவர்களுக்கு என்று இருக்கிற இல்லங்களில் அளிக்கப்படும் உணவு- விடுதிச் செலவு தனியாகக் கணக்கிடப்படுகிறது. பள்ளி இறுதி வகுப்பு வரை மதிய உணவு தருவது என்பது கடினம். ஐந்து வகுப்பு வரையுள்ள மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு அளிப்பதற்கே இவ்வளவு தொகை ஆகும்போது, இதற்கு இன்னும் மிக அதிகமான தொகை செலவழிக்க வேண்டிவரும்.

திரு. டி. சந்தோஷம் : தலைவரவர்களே, இப்போது அமுலில் இருக்கும் நண்பகல் உணவுத் திட்டம் எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது, அது விரும்பப்படுகிறதா, அந்தத் திட்டத்தை எந்த விதத்தில் சீர்திருத்தி அமைக்கலாம் என்ற பரிசீலனை நடந்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போதிருக்கிற முறையில் ஆங்காங்கு இருக்கிற நிர்வாகிகள் ஆசிரியர்களை வைத்துக் கொண்டு ஊர் மக்களின் ஒத்துழைப்போடு செய்கிறார்கள். 'கேர்' நிறுவனத்தார், மைய உணவுக் கூடங்கள் அமைத்து அதன் மூலம் வழங்கும் முயற்சிக்கு உதவி செய்வதால், கிட்டத்தட்ட 96 ஒன்றியப் பகுதிகளில் மைய உணவுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமையல் கூடம், பாத்திரம் தருகிறார்கள். இடம், கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய கூலியாட்கள் அமர்த்த வேண்டிய பொறுப்பு நம்மைச் சேர்ந்தது. உணவுப் பொருள் வழங்க வேண்டிய பொறுப்பு நம் அரசைச் சேர்ந்தது. அதற்கு அவர்கள் இரண்டு 'வான்'கள் தருகிறார்கள். எடுத்துக்கொண்டு போய் பரிமாறுகிற பொறுப்பை அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். இது வசதியாக உள்ளது. பள்ளியில் சமைக்க வேண்டிய அவசியம் இல்லாமல், 96 பிளாக்குகளில் இந்த வசதி ஏற்பட்டிருக்கிறது. மெல்ல, மெல்ல இரண்டு மூன்று ஆண்டுகளில் 374 பிளாக்குகளுக்கும் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். மாவட்டத்திற்கு மாவட்டம் ஒரு குறிப்பிட்ட ஒன்றியத்தை எடுத்துச் செய்யலாம் என்றால், கட்டடம் கட்டும் வேலையை ஒவ்வொரு மாவட்டத்

துக்கும் அடிக்கடி நகர்த்த முடியாது. செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து தொடங்கி ஒவ்வொரு மாவட்டமாகப் போகலாம் என்ற முறையை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், இப்போது செங்கற்பட்டு மாவட்டம், கிட்டத் தட்ட வட ஆர்க்காடு மாவட்டம் முழுவதும், தென் ஆர்க்காடு மாவட்டத்தின் பகுதியிலும் நிறைவேறிவிட்டது. மற்ற மாவட்டங்கள் மெல்ல மெல்ல எடுத்துக் கொள்ளப்படும். அப்போது நான் இந்தத் திட்டம் திறம்பட நடத்தப்படுகிற சூழ்நிலை ஏற்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, மதிய உணவுத் திட்டத்துக்கு 10 பைசா அளிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். உண்மையாக 6 பைசா தான் அளிக்கப்படுகிறது. மீதிக்கு பொய்க்கணக்கு, பொய் ரசீதுகள் எழுதப் பட்டுகின்றன என்று ஆசிரியர் போராட்டத்தின்போது அமைச்சரிடம் சொல்லி அது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்கான உத்தரவு, 6 பைசாவுக்குக் கணக்கு எழுத ஒப்புக்கொள்வது அமுலுக்கு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசாங்கம் 6 பைசா கொடுக்கிறது, ஒன்றியம் 2 பைசா கொடுக்கிறது, பொதுமக்களிடம் 2 பைசா வசூலிக்கப்படுகிறது. மிகச்சில இடங்களில் 10 காசு அளவுக்குத் திட்டம் நிறைவேறுகிறது. சில இடங்களில் 10 காசுக்குப் பதிலாக, 6 காசிலேயே முடித்துக் கொள்கிறார்கள். 10 காசு அளிக்கும் பொறுப்பை நாமே ஏற்றுக்கொண்டால், அளிக்கும் தொகையைக் கூட்ட வேண்டும் அல்லது எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அதற்காகத்தான் மதிய உணவு அளிப்பதற்கு எல்லா இடத்திலும் மையக் கூடம் ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறோம். இதை எப்படி சமாளிப்பது என்றும் இடர்ப்பாடுகள் ஏற்படா மல் தடுக்கவும் வழி முறைகளை அரசு ஆராய்ந்து வருகிறது. தக்க முடிவு விரைவில் எடுக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு நிலம் இனமாக வழங்கும் நிலச்சுவான்தார்களுக்கு உச்ச வரம்புச் சட்டத்தில் ஏதாவது சலுகை கொடுத்தால், அந்தச் சலுகையை முன்னிட்டாவது நிலம் கொடுப்பார்கள். அதன்மூலம் நிதி பெற்று வசதியை உருவாக்கிக் கொண்டு இந்த மதிய உணவுத் திட்டம் ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளிலுள்ள ஏழை மாணவர்கள் அனைவருக்கும் பயன்படும்படி செய்யலாம். இதைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உச்ச வரம்புச் சட்டமும் வர இருக்கிறது. பள்ளிக்கூடத்துக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கலாம், கல்லூரிக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கலாம் என்ற நிலைமைகள்

[1972 ஆகஸ்டு 9]

எல்லாம் வரவிருக்கின்றன. இந்த எண்ணத்தை இனிமேல் செயல்படுத்த முடியுமா என்பது தெரியவில்லை. இதற்கு முன்னால் இந்த எண்ணம் இருந்தால் செய்திருக்கலாம். சில பல இடங்களில் குறிப்பிட்ட அளவுக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். மிக மிகக் குறைவான இடங்களில் தான் நடந்திருக்கிறது. நிலங்களை எழுதி வைத்து அதன்மூலம் வருகிற உணவு தானியம் மதிய உணவுத் திட்டத்துக்குப் பயன்படுமானால் நல்லது தான்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, 'கேர்' ஸ்தாபனம் எத்தனை ஆண்டுகளுக்கு இதுபோன்று நன்கொடை வழங்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். என்றைக்கேனும் ஒரு நாள் நிறுத்திவிட்டால், நாம் வற்புறுத்த முடியாது. அண்மையில் தகராறு ஏற்பட்டபோது கூட, அரசாங்கத்துக்கு அரசாங்கம் ஏற்படுகிற நிலைமை வேறு; 'கேர்' நிறுவனம் உலகம் பூராவும் பணியாற்றுகிற ஒரு நிலையம்; அது தன்னுடைய கொள்கையை விட்டுவிடாமல், கொடுக்குமென்று சொன்னார்கள். இடர்ப்பாடுகள் இல்லாமல் அந்த உதவி வந்துகொண்டிருக்கிறது; இனியும் வரும் என்ற நம்பிக்கை கொள்ளலாம்.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, பிஞ்சு உள்ளங்களில் ஏற்றத்தாழ்வு தோன்றக்கூடாது என்று சீருடை வழங்கி வருகிறோம். இந்த மதிய உணவுத் திட்டம் செயல்படுகிற காரணத்தால், ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட வழி ஏற்படுகிறது. அதே நேரத்தில் கடந்த 20 ஆண்டுகளில் கிராமப்புறங்களில் வசதி வாய்ப்புகள் பெருகியிருக்கிற காரணத்தால், ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கும் இந்தத் திட்டத்தை நிறுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சமுதாயத்தில், வீடுகளில், தெருக்களில் வேறு பல இடங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை மாற்றினாலொழிய. இதை மாற்ற முடியாது. இந்த ஏற்றத் தாழ்வுகளை ஓரளவுக்குக் குறைக்கும் நோக்கத்தோடு தான் பணியாற்றுகிறோம். ஏழைகளுக்கு இந்தத் திட்டத்தின் பலன் கிடைக்காமல். எல்லோரையும் ஒரே மாதிரியாக நாம் கருதினால், பலர் படிக்காத நிலை ஏற்பட்டு ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கும். படிக்க வசதி இல்லாமல் போகாமலிருக்கத்தான், தொடர்ந்து படிப்பதற்கான சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. வசதி படைத்தவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு ஒப்ப ஏழைகள் வீட்டுப் பிள்ளைகளும் கல்வித் திறனைப் பெற வசதி செய்து அதன் மூலம் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் வழியில் தான் போய்க் கொண்டிருக்கிறோம்.

[1972 ஆகஸ்டு 9

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, பழங்காலத்தில் யாத்திரிகர்களுக்கு உணவு போடுவதற்கென்று ஏற்பட்ட சத்திரங்கள் இருக்கின்றன. அங்கேயாருமே சாப்பாடு போடுவதில்லை. அந்தச் சத்திரங்களின் தர்மகர்த்தாக்கள் விரும்பினால், அந்தச் சத்திரங்களை இந்த மையக் கூடங்களாக உபயோகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஊக்குவிக்குமா, அதற்குச் சட்டம் இடையூறாக இருக்காமல் பார்த்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது சத்திரங்களை நடத்தி வருகிற தர்மகர்த்தாக்களே அவைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்ற நிலை தான் இருக்கிறது. பிறருக்கு தானம் வழங்கப்படுகிற இடங்கள் அவர்களுக்குப் பயன்படுகிறது. இதைச் சீர்படுத்த இப்பொழுது சட்டம் கொண்டு வரப்படுகிறது.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, சத்திரங்களுக்குரிய நிலங்களில் பெரும்பாலானவை 'மைனர் இனாம்' அபாலிஷனாலும் ஜமீந்தாரி அபாலிஷனாலும் போய்விட்டன. அந்தச் சத்திரங்களில் பெரும்பாலனவை ரிப்பேர் பார்க்கக்கூட முடியாமல் பூட்டிக் கிடக்கின்றன என்பது அரசின் கவனத்திற்கு வந்து விவரம் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமைகளும் இருக்கின்றன. அம்மாதிரி இடங்களில் கோடவுன்கள் கட்டுகிறார்கள். 'கேர்' நிறுவனமானது அதில் உணவைச் சேகரித்துப் பரிமாறுகிற முயற்சிகளை மேற்கொள்ளுகிறது. வேறு ஒரு திட்டத்தைத் தீட்டும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வருகிற வருமானத்தை வைத்து, அதாவது நெல்லை சேர்த்து வைத்து, பல்வேறு மைய உணவுக் கூடங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அங்கு இருப்பவர்கள் எடுத்துக் கொள்ளுகிற முயற்சியால் இதற்காக ஒப்படைக்கப்படுகிற நிலங்கள் பயன்படும். இதைப்பற்றி ஆராயும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு நல்ல முடிவு வருமானால், ஒரு குறிப்பிட்ட இடத்தில் உதாரணமாக 40 அல்லது 50 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டு அதில் வருகிற நெல்லை கோடவுன்களுக்கு கொண்டு வந்து ஒரு ஜில்லா முழுவதற்கும் 10, 15 மைய உணவுக் கூடங்களுக்குப் பரிமாறிக்கொள்ளலாம். அதில் வேண்டிய உணவுப் பண்டங்களை சேர்த்து வைத்துச் செய்யலாமா என்று ஆராயப்படுகிறது. மாவட்டங்களில் எங்குள்ள நிலங்களைப் பெறலாம் அறநிலையங்களின் கோவில் நிலங்களைப் பெறலாமா என்று ஆராயும்படி

[1972 ஆகஸ்டு 9]

கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது ஓரளவுக்கு வெற்றி பெறுமானால் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய யோசனைகள் வெற்றி பெற முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN : May I know whether there is any procedure for checking the kitchens and vessels used for cooking these midday meals, since we are hearing of food poisoning cases very often, that too recently from Hosur ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புதிதாக அமைக்கப்படுகிற மையக் கூடங்களில் அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்பட வழியில்லை. ஏனென்றால் எவர்சில்வர் பாத்திரங்களை வைத்து தூய்மையான உணவை உருவாக்குவதற்கான முறையில் அந்தப் பாத்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட ஓரிரண்டு இடங்களில் தவறு ஏற்பட்டு விடுகிறது. அதற்கு முன்னேற்பாடாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

Operation Theatres.

* 5. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether it is a fact that two Operation Theatres of Thanjavur Medical College Hospital have remained closed for a long time; and

(*b*) if so, the reasons therefor ?

அறுவை சிகிச்சை நிலையங்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சை நிலையங்களில் (Operation Theatres) இரண்டு நீண்ட காலமாக மூடப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இந்த மருத்துவமனையில் டிடேனஸ் காரணமாக இரண்டு அறுவை சிகிச்சை அரங்கங்கள் சிறிது காலம் மூடப்பட்டிருந்தன. இவ்வரங்கங்கள் 8—3—1972 முதல் தொடர்ந்து இயங்குகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்